**செய்தி வெளியீடு எண் : 2485** **நாள் : 11.12.2023**

# செய்தி வெளியீடு

**"மிக்ஜாம் " புயலால் ஏற்பட்ட வெள்ள பாதிப்புகள் குறித்தான அவசர ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

இன்று 11.12.2023 ம் தேதி தலைமைசெயலகத்தில் "மிக்ஜாம் " புயலால் ஏற்பட்ட வெள்ள பாதிப்புகள் குறித்தான அவசர ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இவ்வாய்வு கூட்டத்தில் சென்னை, செங்கற்பட்டு, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள நீர்வளத்துறையால் பராமரிக்கப்படும் செம்பரம்பாக்கம், செங்குன்றம் , சோழவரம் , பூண்டி மற்றும் பிற ஏரிகளிலும் , அடையாறு ஆறு ,கூவம் ஆறு, கொசஸ்தலை ஆறு, பக்கிங்காம் கால்வாய் மற்றும் பிற நீர்வழித்தடங்களில் ஏற்பட்டுள்ள வெள்ள பாதிப்புகள் குறித்து கேட்டறிந்ததோடு, 11.12.2023 முதல் 13.12.2023 வரை புயலால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்த ஆய்வு மேற்கொள்ள வருகை புரிந்துள்ள மத்திய குழு வல்லுநர்களிடம் விரிவான விவரங்களை சமர்ப்பிக்கும்படி நீர்வளத்துறை உயர் அலுவலர்களை கேட்டுக்கொண்டார்.

மேலும் 2024-2025 – ம் ஆண்டு நீர்வளத்துறை மூலம் மேற்கொள்ளப்படவுள்ள முக்கிய வரைவுத்திட்டங்களுக்கான தேவைப்படும் நிதியினை முன்மொழிவதற்கும், மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் அவர்கள் நீர்வளத்துறை உயர்அதிகாரிகள் மற்றும் பொறியாளர்களுடன் கலந்தாலோசித்தார்

இக்கூட்டத்தில் நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.சந்தீப் சக்சேனா இ.ஆ.ப , நீர்வளத்துறை முதன்மை தலைமைப்பொறியாளர் திரு.ஏ.முத்தையா , தலைமை பொறியாளர் சென்னை மண்டலம் திரு.கு.அசோகன் , தலைமை பொறியாளர் திட்ட உருவாக்கம் திரு.க.பொன்ராஜ் , மற்றும் நீர்வளத்துறை பொறியாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in